பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் பில்சீ - 2024
--

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

பீப்பிளஸ் இன்சுரன்ஸ் பில்சீயின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ.	மீள் காப்புறுதி பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய உருவாக்கிய முறைமை காலப் பகுப்பாய்வு பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மீள் காப்பீடுகளுடன் நிலுவையாக இருக்கின்ற நிலைகளின் விரிவான மீளாய்வை பெறுவதற்கு அத்தகைய கட்டமைக்கப்பட்ட பகுப்பாய்வு எல்லைகள் இன்மை இயலக்கூடியது. முறைமை உருவாக்கிய காலப்பகுப்பாய்வு மீதிகளின் உண்மைத் தன்மை மற்றும் .கண்காணிப்பை உறுதிப்படுத்துதல், நிலுவை தொகை தீர்பனவு கால நீடிப்பு மற்றும் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற அல்லது தகராறுக்குரிய விடயங்களை முறையாக இனங்காணல்	கவனத்திற் கொள்ளப்பட்டது. செலுத்த வெண்டிய காப்பீட்டிற்காக திரும்பவும் முறைமை அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் தற்போது பரீசாத்த கட்டத்தில் உள்ளது ஆகவே, முறைமை பெறவேண்டிய காப்புறுதிக்காக திரும்பவும் முறைமை விருத்தி செய்யப்படும். இது 2025 ஒக்தோபர் 31 இல் பூர்த்தியாக்கப்படும்.	பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய காப்புறுதிக்காக முறைமை உருவாக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு முகாமைத்துவ அமுலாக்கலை பரிந்துரைத்துள்ளது. இது நிலுவையாக இருக்கின்ற மீதிகள், நிலுவை உரிய கால தீர்ப்பனவு மற்றும் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற அல்லது தகராறுடைய விடயங்களின் சரியான கண்காணிப்பை உறுதிப்படுத்துவதற்கு நிதி அறிக்கையிடல் நடைமுறைக்குள்

	என்பவற்றிற்காக கடுமையான வழிகள் உள்ளது.		ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	ரூபா 105.5 மில்லியன் தொகையான செலுத்தப்பட்ட கோரிக்கைகள் மீது செலுத்தப்பட்ட பெறவேண்டிய மீள் காப்புறுதியை 365 நாட்களிற்கு மேலாக நிலுவையாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. அந்த மீதிகளில் ரூபா 73 மில்லியன் வெளிநாட்டு காப்புறுதியிலிருந்து பெறவேண்டியவையும் ரூபா 31 மில்லியன் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து (NITF) பெறவேண்டியவையாகவும் உள்ளது. அடிப்படைய கோரிக்கைகள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்கனவே முழுமையாக தீர்க்கப்பட்டிருந்ததும் இந்த நிலை தொடருகன்றது. அந்த மீதிகளின் நீண்டகாலம் அறவிடப்படாதது தீர்ப்பனவு செயன் முறைகளில் சாத்தியமான தாமதங்களை குறிக்கின்றது மற்றும் நிறுவனம் அதிகரித்த கடன் ஆபத்து, திரவத் தன்மை கட்டுப்பாடுகள், மீள் காப்புறுதி கணக்குகளை சீராக்கல் என்பன சவால்களிற்கு உளளாகக்கூடும். .	கவனத்திற் கொள்ளப்பட்டது. 365 நாட்களிற்கு மேலாக பெற வேண்டிய ரூபா 30,476,246.25 மீதிகளில் ரூபா 12,701,544.78 ஐ நாங்கள் அறவிட்டிருந்தோம். எதிர்காலத்தில் காப்புறுதியின் அறவீட்டு நடைமுறை முறைமை ஊடாக உருவாக்கப்பட்ட அறிக்கைக்கு திரும்பவும் பெற வேண்டிய காப்புறுதிக்கமைய நெருக்கமாக கண்காணிப்பொம். 300 நாட்களிற்குள் பெறவேண்டிய காப்புறுதிகளை பெறுவதற்கு செயற்பாடுகள் அமுலாக்கப்பட்டிருந்தது. 300 நாட்களிற்குள் பெறப்பட்டிருக்காதுவிடின் உரிய காப்புறுதிகளிற்கு செலுத்த வேண்டிய தவணைப் பணத்திற்கு எதிராக நிலுவைகளை சரிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். செலுத்த வேண்டிய தவணைப் பணம் எதுவும் இல்லாதிருப்பினும் உரிய காப்புறுதியாளர் கோரிக்கை கடிதத்தை அனுப்ப வேண்டும்.	முகாமைத்துவமானது 365 நாட்களிற்கு மேல் நிலுவையாக இருக்கின்ற குறிப்பாக பெறவேண்டிய காப்புறுதிக்காக கண்காணிப்பு மற்றும் அறவீட்டு நடைமுறை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைத்துள்ளது. இது அறவீட்டு முயற்சிகளிற்கு ஆதரவளிப்பதற்கு காப்புறுதி கணக்கு மற்றும் ஆவணத் தொடர்பகளின் வழமையான இணக்கங்களை பேணுகின்ற வெளிநாட்டு காப்புறுதியாளர் மற்றும் NITF ஆகிய இரண்டுடன் கட்டமைக்கப்பட்ட தொடர் நடவடிக்கை மற்றும் வேறுபாட்டு பொறமுறை தாபித்தல் உள்ளடக்கப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத வைப்புக்களை கொண்டிருந்த ரூபா 227,582,132 ஆன மிகையான தவணைப் பண மீதி 365 நாட்களிற்கு மேல் நிலுவையாக இருக்கின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த மீதி குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. தாபிக்கப்பட்ட நடைமுறை பிரகாரம் கடன் பத்திர வைப்பாளரை இனங்கண்ட பின்னர் வாடிக்கையாளருக்கு	நாங்கள் 2025 ஏப்ரல் 10 இல் மிகையான தவணைப் பணத்தை இணக்கம் செய்வதற்கு புதிய நடைமுறையை தொடங்கியிருந்தோம். பின்னர் ரூபா 269 மில்லியன் பிரதான கேரிப்பு கணக்கிற்கு பதியப்பட்டதுடன் 2025 யூலை 31 வரை ரூபா 233 மில்லியன் (87 சதவீதம்) அறவிடப்பட்டது. 2025 யூலை 31 இல் உள்ளவாறு மிகுதியாக இருக்கின்ற தீர்க்கப்படாத மீதி ரூபா 36 மில்லயன் (13 சதவீதம்) ஆகும்.	முகாமைத்துவமானது ரூபா 227.6 மில்லியன் நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற மிகை தவணைப் பண மீதிகளின் விரிவான மீளாய்வை நடாத்துவதற்கும் அதன் உரியகால அறவீடுகளை உறுதிப்படுத்துவதற்கு கட்டமைக்கப்பட்ட நடைமுறையை தாபிப்பதற்கும் பரிந்துரைத்துள்ளது. இது

	புதிய கொள்கை வழங்கப்பட்ட போதும் மிகையான தவணைப்பண கட்டண தொகைக்காக உயர்த்தப்பட்டது. இந்த மீதியின் அதிகரிக்கப்பட்ட திரட்டல்கள் மிகையான தவணைப் பணத்தொகையின் உரியகால அறவீடு மற்றும் முறையான முகாமைத்துவ உறுதிப்படுத்தல் என்பன தீர்ப்பனவில் தாமதங்களை குறிப்பதுடன் நெருக்கமான மீளாய்வு வேண்டப்பட்டது.	இணக்கம் செய்யும் நடைமுறை செயற்பாட்டில் உள்ளன.	மிகையான தவணைப் பணக் கணக்குகளை இணக்கம் செய்தல், வாடிக்கையாளர் தொடர் நடவடிக்கை பொறிமுறையை வலுப்படுத்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையை கடந்த நிலுவையாக இருக்கின்ற மீதிகளிற்காக முரண் நடைமுறைகளை அறிமுப்படுத்தல் என்பன உளாடக்கப்பட வேண்டும்.
ஆ	நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற 365 நாட்களிற்கும் அதிகமாக நிலுவையாக இருக்கின்ற மோட்டார் கோரிக்கை மீதிகள் ரூபா 238,706,772 ஆகும்.	கவனத்திற் கொள்ளப்பட்டது. நிலுவையாக இருக்கின்ற மீதிகளில் 81 சதவீதத்திற்கும் மிகையான கோரிக்கைகள் நிலுவையிலுள்ள நீதி மன்ற தீர்ப்புகளுடன் மூன்றாம் தரப்பு கொரிக்கையாக இருந்தன. சட்ட திணைக்களம் அந்த கொரிக்கைகளை கையாள்வதற்கு கட்டமைப்பு நடைமுறைகளை கொண்டிருந்தது. நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற மோட்டார் கோரிக்கையின் 19 சதவீத மீதிகள் சகல வேண்டப்பட்ட ஆவணங்களையும் பெற்ற பின்னர் 2 வேலை நாட்களிற்குள் தீர்க்கப்பட்டிருந்த சொந்த வாகனம் சேதமடைந்திருந்ததுடன் சகல வேண்டுகைகளும் நிறைவேற்றப்பட்டன.	முகாமைத்துவமானது நிலுவையாக இருக்கின்ற மோட்டார் கோரிக்கை மீதிகளிற்காக கட்டமைக்கப்பட்ட தொடர் நடவடிக்கை மற்றும் தீர்ப்பனவு நடைமுறை அமுலாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. இது .கோரிக்கை கணக்குகளை இணக்கம் செய்தல், மேலதிக கோரிக்கைகளின் உரியகால பரிமாற்றம் மற்றும் தாமதமான தீர்ப்பனவுகளிற்காக தெளிவான கணக்களிப்பு என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 03 ஆம் இலக்க உரிமம்	உரிமத்தின் பிரகாரம், தவணைக் கட்டண தீர்ப்பனவு காலப் பகுதி தவணைப்பணம் செலுத்த வேண்டிய திகதியிலிருந்து 60 நாட்டகளிற்குள் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல்	கவனத்திற் கொள்ளப்பட்டது. காப்புறுதிக் கொள்கைகள் வித்தியாசமான பிரிவு வாடிக்கையாளருடன் வித்தியாசமான கடன் ஒழுங்குகளை கொண்டிந்ததுடன் காப்புறுதி தொழில் நிறுவனத்தில் இந்த விடயம் கலந்துரை யாடப்பட்டிருந்தது. ஒட்டு	முகாமைத்துவமானது செலுத்த வேண்டிய காப்புறுதி தவணைப் பணம் செலுத்த வெண்டியவைகளில் அத்தியதியிலிருந்து 60 நாட்களிற்குள் தவணைப்பண காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 03 ஆம் இலக்க உரிமத்துடன்

ஆணைக்குழுவீன் 03 ஆம் இலக்க உரிமத்துடன் நாட்டின் கடன் காலப்பகுதியை பயன்படுத்தியிருந்ததுடன் விலகல்களிற்காக அனுமதி பெறாதிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

- மீளக்குறிப்பிடப்பட்ட தரகு, நிதிக் கம்பனி, வங்கி, PLC, பீள்பிள்ஸ் மைக்றோ-நிதி, தொகுதி கொள்கைகள் முழு காப்புறுதி தவணைப் பணமும் செலுத்தியிருக்காதவர் 100 நாட்களில் (தொடங்கிய திகதியிலிருந்து) இரத்து செய்யப்பட வேண்டும்.
- மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாதவற்றிற்கான அரசாங்க கேள்வி கொள்கைகள் தவணைப் பணமும் செலுத்தியிருக்காதவர் 180 நாட்களில் இரத்து செய்யப்பட வேண்டும்.
- சகல நேரடி, முகவர், வியாபார மேம்பாட்டுக் கொள்கை முழு காப்புறுதி தவணைப் பணமும் பெறப்பட்டிருக்காதவர் 65 நாட்களில் இரத்து செய்யப்பட வேண்டும்.
- மக்கள் வங்கி நிதி அக்கறையுடனான கொள்கை முழு காப்புறுதி தவணைப் பணமும் செலுத்தப் பட்டிருக்காதவர் 120 நாட்களில் இரத்து செய்யப்பட வேண்டும்.
- முழு காப்புறுதி தவணைப் பணமும் பெறப்பட்டிருக்காதவர் இணைந் காப்புறுதி கொள்கை (தொடக்கம்) இரத்து செய்யப்பட வேண்டும்.
- கடற்கரை காப்புறுதி

மொத்த 60 நாட்கள் கடன் காலப்பகுதி வரையறுப்பதற்கு பாதகமாக உள்ளது. எவ்வாறாயினும், தற்போது ஒழுங்குபடுத்தல் பிரமாணம் கடன் காலப் பகுதி தொடர்பில் காப்புறுதி கம்பனிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றன.

முழுமையாக இணங்குவதை உறுதிப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த கடன் காலப் பகுதியிலிருந்து ஏதாவது விலகல்கள் ஒழுங்கு படுத்துவோரிடமிருந்தான முன்னனுமதியுடன் மாத்திரமே கையேற்க்கப்பட வேண்டும்.

			கொள்கைகள் 120 நாட்கள் கடன்களை அனுமதிக்க முடியும்.

1.8. காசு முகாமைத்துவம்.

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 26,666,225 வங்கி கணக்கிணக்கக் கூற்றில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப் படுகின்றதுடன் கம்பனியின் கணக்கீட்டுப் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	மாத இறுதியில் பதியப்பட்ட இனங்காணப்படாத கடன்கள் இரண்டு மாதங்கள் வரையும் வங்கி இணக்கக்கூற்றில் இருந்தது. அவை இனங்கண்டு தெளிவாக்கப்படும். இது கம்பனியால் பின்பற்றப்பட்ட அந்த நேர நியம நடைமுறையாக உள்ளது.	முகாமைத்துவம் வங்கி இணக்கக்கூற்றில் காணப்படுகின்ற ரூபா 26,666,225 ஆன இனங்காணப்படாத கடன் மீதிகளை மீளாய்வு செய்வதற்கும் அதன் மூலத்தை கண்டறிவதற்கும் முறையான நடவடிக்கை எடுப்பதறகும் பரிந்துரைத்துள்ளது. மேலும் முகாமைத்துவம் மீண்டும் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் நிதி அறிக்கையிடலின் உண்மை மற்றும் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இனங்காணப்படாத மீதிகள் உரியகால மீளாய்வு மற்றும் தொடர் நடவடிக்கை எடுத்தல் உள்ளடங்க வங்கி இணக்க நடைமுறையை வலுப்படுத்த வேண்டும். .

1.9. பொதுவான IT கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	கம்பனியானது பொது காப்புறுதி முறைமைக்குள் பயன்பாடுத்தல் உத்தியோகத்தர்களால் செயற்படுத்தப்பட்ட சலுகை பெற்ற நடவடிக்கைகள் மீது போதிய கண்காணிப்பு பொறிமுறை தாபிக்கப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேற்பார்வை அனுமதிக்கப்படாத முறைமை மாற்றங்களின் ஆபத்து அதிகரிப்பு, தரவு கையாளல் மற்றும் கண்டறியப்படாத தவறுகள், அவற்றின் மூலமான IT கட்டுப்பாடுகளின் வினைத்திறன் நலிவுகள் மற்றும் முக்கியமான தரவு	அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் அமுலாக்கப்பட்டது.	முகாமைத்துவம் பொது காப்புறுதி முறைமைக்குள் பயன்படுத்தல் உத்தியோகத்தர்களால் சலுகை பெற்ற நடவடிக்கைகள் மீது போதிய கண்காணிப்பு கட்டப்பாடு அமுலாக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது. இது விரிவான கணக்காய்வு பதிவுகள், சலுகை நடவடிக்கைகளின் கால ரீதியான சுதந்திர மீளா:வு அமுலாக்கல் மற்றும் சாத்தியமான இடங்களில் கடமைகள் ஒப்படைத்தலை அமுலாக்கல் என்பன

	ஒருங்கிணைப்பு மற்றும் நம்பக தன்மையான தீர்ப்பு போன்ற இல்லாதிருந்தது.		உள்ளடக்கப்பட வேண்டும்.
ஆ	இராஜினமா செய்த ஊழயரின் பயன்பாட்டாளர் கணக்குகள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது காப்புறுதி முறைமை (GIS) மற்றும் மக்களுடைய HR முறைமை உரிய வழயில் செயலிழக்க செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இல் ஒன்பது காப்புறுதிகள் 21 நாட்கள் வரையான ஆகக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. அதேநேரம் மக்களுடைய HR முறைமையில் 12 சந்தர்ப்பங்கள் 18 நாட்டகள் வரையான ஆகக்கூடிய தாமதங்கள் இனங்காணப்பட்டது.	முறைமை உரிய நெரத்தில் இராஜினாமா செய்த ஊழியரின் கணக்குகளை செயலிழக்கச் செய்வதற்கு உள்ளது.	முகாமைத்துவம் பொது காப்புறுதி முறைமை (GIS) மற்றும் மக்களுடைய HR முறைமை இரண்டிலும் இராஜீனாமா செய்த ஊழியருக்கு சொந்தமான கணக்குகளில் உரிய விலகல்களை செயலிழத்தலை உறுதிப் படுத்துவதற்கு பயன்பாட்டாளர் நுழைவு முகாமைத்துவ கட்டுப்பாட்டை வலுப்படுத்தப்பட வேண்டும்.
இ	இராஜினாமா செய்த ஊழியரின் பயனாளர் கணக்குகளை பொது காப்புறுதி முறமை மற்றும் மக்களுடைய HR முறைமை இரண்டினையும் செயலிழக்க செய்திருந்தது. பின்னர் மூன்று பயன்பாட்டாளர் கணக்குகள் உரிய இராஜினாமா திகதியை பின்னோக்கி செய்பட்டிருந்ததுடன் மக்களுடைய HR முறைமைக்கு நுழைவதற்கு பயன்படுத்தப்பட்டன. இது பயன்பாட்டாளர் நுழைவு முகாமைத்துவ கட்டுப்பாட்டில் நலிவுகளை குறிக்கின்றதுடன் அனுமதிக்கப்படாத நுழைவு அல்லது தவறாக பயன்படுத்தலின் சாத்தியமான அபாயத்திற்கு முறைமைகளை வெளிப்படுத்தியது.	பயன்பாட்டாளர் கணக்குகளின் உடனடியான செயலிழப்பை கொண்டுள்ளது.	முகாமைத்துவம் ஊழியர் இராஜீனாமா மீதான பயன்பாட்டாளர் கணக்குகளின் உடனடி செயலிழப்பமை உறுதி செய்வதற்கு முறையான நடைமுறை தாபித்து செயற்படுத்த பரிந்துரைத்துள்ளது. இந்த நடைமுறைக்காசு வெளியேறும் நடைமுறைகளுடன் இணைக்கப்பட்ட தானியங்கி தூண்டுதல்கள் நடைமுறையிலுள்ள கணக்குகள் அவ்வப்போது மீளாய்வு மற்றும் ஏதாவது விதி விலக்குகளை உடனடியாக இனங்கண்டு சீராக்குவதற்கான கண்காணிப்பு பொறிமுறைகளை உள்ளடக்குகின்றது.
ஈ	கம்பனியின் IT ஆளுகை வேலை கட்டமைப்பை தாபிப்பதற்கு தற்போதைய முகாமைத்தவ நடைமுறையில் “ICT நடைமுறை கையேட்டில்” வரையறுத்த நியம நிலைகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து விலகுகின்றன. இது தாபிக்கப்பட்ட நிர்வாக வேல கட்டமைப்புகளை பின்பற்றுவதில் உள்ள இடைவெளியை குறிக்கின்றது. அத்தகைய விலகல்கள் முறைமை தவறுகள்	அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் பூர்த்தியாக்கப்பட்டது.	தற்பொதைய முகாமைத்துவ நடை முறையை மாற்றுவதை சரியாக வெளிப்படுத்த “ICT நடைமுறை கையேடு” நாளது வரையாக்குவது முக்கியமாக உள்ளது. குறிப்பாக உண்மையான நடைமுறையுடன் ஒத்துப்போக ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகளிற்குள் முகாமைத்துவ குழு (CMC)

	ஏற்படுத்தும் ஆபத்தை அதகரிக்கக்கூடும். மேலும் முக்கியமான வணிக செயற்பாடுகளில் சாத்தியமானளவு இடைவெளியை ஏற்படுத்தகூடும்.		மாற்றத்தில் ஈடுபடுவது ஈடுபடுவதை ஒருங்கிணைக்கின்றது.
உ	இடர் அறவீடு (DR) தளத்தை சுற்றி பயர்வெல் செயற்பட்டிருக்கவில்லை, இது முக்கியமான ஆபத்தான முறைமைகள் மற்றும் முக்கியமான தரவுகளை அனுமதிக்கப்படாத நுழைவு மற்றும் வெளிவாரி சைபர் அச்சுறுத்தலை வெளிப்படுத்துகின்றது. இது அடிப்படை வலையமைப்பு பாதுகாப்பு கட்டுப்பாடு இன்மை தரவு மீறல்கள், முறைமை இணக்கப்பாடு, மற்றும் வணிக தொடர்சி இடையூறு என்பவற்றின் ஆபத்தை அதிகரிக்கின்றது.	அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் பூர்த்தியாக்கப்பட்டது.	முகாமைத்துவமானது அனுமதிக்கப்படாத நுழைவுகளிலிருந்து ஆபத்தான முறைமைகள் மற்றும் தரவு வெளிவாரி சைபர் அச்சுறுத்தல்களை பாதுபாப்பதற்கு இடர் அறவீடு (DR) தளத்தில் ஒரு சுற்றளவு பயர்வெல் அமுலாக்கப்பட பரிந்துரைத்தள்ளது. மேலும், DR தளத்தில் வலையமைப்பு பாதுகாப்பு கட்டுப்பாடு முளிய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்துவதற்காக பரீட்சிக்கப்பட்டது. அவை நிறுவனத்தின் IT பாதுகாப்பு கொள்கையுடன் ஒத்துப் போகக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 701,615,545 ஆன வரிக்கு மன்னரான இலாபமாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு மன்னரான இலாபம் ரூபா 784,475,986 ஆக காணப்பட்டது. ஆகவே நிதி விளைவுகள் ரூபா 82,860,441 தொகையினால் வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. ரூபா 231,371,885 ஆல் குறைத்து ஏழுதிய மற்றும் தேறிய சுவீகரிப்பு கிரயங்களில் அதிகரிப்பு வீழ்ச்சிகளுக்கான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய நான்கு (04) ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

வரிசை விடயம்	**2024 ரூபா மில்லியன்**	**2023 ரூபா மில்லியன்**	**2022 ரூபா மில்லியன்**	**2021 ரூபா மில்லியன்**	**2020 ரூபா மில்லியன்**
கம்பனி					
வருமானம்	**5,928.20**	**5,629.84**	**6,394.66**	**5,905.72**	**6,162.73**
முரண்	298.366	(764.829)	488.944	(257.010)	54.210
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	5.30%	-11.96%	8.28%	-4.17%	0.89%
மொத்த எழுதப்பட்ட பிரிமியம்	**6,249.30**	**5,762.72**	**6,132.05**	**5,967.95**	**6,011.56**
முரண்	486.572	(369.327)	164.100	(43.610)	(18.410)

அதிகரிப்பு /(வீழ்ச்சி)	8.44%	-6.02%	2.75%	-0.73%	-0.31%
தேறிய உழைத்த பிறிமியம்	**4,713.23**	**4,170.20**	**4,991.77**	**5,120.62**	**5,303.39**
முரண்	543.028	(821.571)	(128.850)	(182.770)	41.660
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	13.02%	-16.46%	-2.52%	-3.45%	0.79%
முரண்	(279.552)	152.466	648.340	(94.350)	(29.460)
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	-19.17%	11.68%	98.60%	-12.55%	-3.77%
தேறிய மாற்றப்பட்ட (நட்டம்) / இலாபம்	**18.06**	**-**	**(402.61)**	**383.99**	**808.18**
முரண்	18.064	402.610	(786.600)	(424.190)	742.940
அதிகரிப்பு /(வீழ்ச்சி)			-204.85%	-52.49%	1138.78%
மொத்த வருமானம்	**5,928.20**	**5,629.84**	**6,394.66**	**5,905.72**	**6,162.74**
முரண்	298.366	(764.825)	488.940	(257.015)	54.215
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	5.30%	-11.96%	8.28%	-4.17%	0.89%
தேறிய நன்மைகள் மற்று் கோரிக்கைகள்	**3,129.71**	**3,125.71**	**3,638.29**	**2,994.31**	**2,699.55**
முரண்	4.002	(512.585)	643.980	294.760	(853.020)
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	0.13%	-14.09%	21.51%	10.92%	-24.01%
குறைத்து ஏழுதிய மற்றும் தேறிய சுவீகரிப்பு கிரயம் **(மீள்காப்புறுதி உள்ளடங்க)**	**490.55**	**259.17**	**477.37**	**527.06**	**559.53**
முரண்	231.372	(218.196)	(49.690)	(32.470)	42.380
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	89.27%	-45.71%	-9.43%	-5.80%	8.19%
ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாக செலவினம்	**1,643.59**	**1,474.02**	**1,239.84**	**1,203.69**	**1,216.19**
முரண்	169.571	234.183	36.150	(12.500)	115.500
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	11.50%	18.89%	3.00%	-1.03%	10.49%
வருமான வரிச் செலவினம்	**272.19**	**262.90**	**364.32**	**189.42**	**472.21**
முரண்	9.296	(101.422)	174.900	(282.790)	207.830
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	3.54%	-27.84%	92.33%	-59.89%	78.61%
ஆண்டிற்கான தேறிய இலாபம்	**429.42**	**521.58**	**635.96**	**979.67**	**1,195.31**
முரண்	(92.157)	(114.382)	(343.710)	(215.640)	547.660
அதிகரிப்பு /(வீழ்ச்சி)	-17.67%	-17.99%	-35.08%	-18.04%	84.56%

2.3 விகிதப் பகுப்பாய்வு

நடைமுறை அண்டு மற்றும் கடந்த ஐந்து (05) ஆண்டுகளிற்கான கணப்பீடு செய்யப்பட்ட பிரதான வீதங்கள் கீழே தரப்படுகின்றன.

கம்பனி குறித்த விகிதம்	**2024**	**2023**	**2022**	**2021**	**2020**
பிடிகாசு வீதம்	75.4%	72%	81.4%	85.8%	88.2%
மொத்த கோரிக்கை வீதம் (அரச வியாபாரம்)	66.4%	75.0%	72.9%	58.5%	50.9%
செலவின வீதம்	44.5%	41.2%	33.7%	33.0%	32.9%
இணைந்த வீதம்	111%	116%	107%	91%	84%
இலாபத்தன்மை வீதம்	11%	14%	16%	20%	28%

ROA	6%	7%	9%	11%	17%
ROE	13%	16%	21%	24%	40%
முதலீட்டு வருவாய்	12%	16%	15%	7%	9%
திரவ வீதம்	1.45	1.42	1.35	1.50	1.44
மொத்த சொத்தக்கான நிதிச் சொத்தககள்	79%	80%	78%	82%	81%
தொழில்நும் ஒதுக்கத்திற்கான மூலதன வீதம்	128%	140%	114%	120%	112%
தொழில்நுட்ப ஒதுக்க வீதம்	107%	111%	122%	123%	128%

இலாபத்தன்மை மற்றும் முதலீட்டு வருவாய்களில் வெளிப்படுத்துகின்ற பல பிரதன நிதி வீதங்கள் ஆண்டுக்கு ஆண்டு நிலையாக மற்றும் கவலைக்கிடமான வீழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக இலாபத்தன்மை மற்றும் முதலீட்டு வருவாய்களில் வெளிப்படுத்துகின்ற பல பிரதன நிதி வீதங்கள் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. இலாபத் தன்மை வீதம் 2022 இல் 28 சதவீதத்திலிருந்து 2021 இல் 16 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. மேலும் 2022 இல் 16 சதவீதத்திலிருந்து 2023 இல் 14 சதவீதத்திற்கு குறைவடைந்ததுடன் 2024 இல் 11 சதவீத குறைவை அடைந்திருந்தது. இந்த போக்கு ஐந்து ஆண்டிற்கு மேலாக அதன் செயற்பாடுகளிலிருந்து இலாபத்தை உருவாக்க கம்பனியினுடைய இயலுமை படிப்படியாக உயர்வதற்கு பரிந்துரைத்தது.

அதேபோல கம்பனியினுடைய வினைத் திறனை அளவிடுவதற்கு சொத்து மீதான வருவாயை (ROA) பயன்படுத்தகின்றது. 2020 இல 17 சதவீதத்திலிருந்து 2021 இல் 11 சதவீதத்திற்கும் 2022 இல் 9 சதவீதத்திற்கும் 2023 இல் 7 சதவீதத்திற்கும் 2024 இல் 6 சதவீதத்திற்கும் இதன் சொத்துக்களின் உழைப்பு வெளியீடு வீழ்ச்சியடைந்திருந்தது. ஆதலால் சொத்து முகாமைத்துவம் மற்றும் வளப் பயன்பாடுகளில் விதைத்திறன் வீழ்ச்சியடைவதை குறிக்கின்றது.

மேலும், கம்பனியின் நலநன போல அதன் பங்குதாரர்களிற்கு உருவாக்குகனின்ற பெறுகைகள் உரிமை மூலதனத்திற்கான வருவாய் (ROE) முக்கிய குறிகாட்டியாக கஉள்ளது. 2020 இல 40 சதவீதத்திலிரந்து 2021 இல் 24 சதவீதத்திற்கும் 2022 இல் 21 சதவீதத்திற்கும் 2023 இல் 16 சதவீதத்திற்கும் 2024 இல் 13 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. ROE இலுள்ள குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பங்குதாரர் உறவு, உரிரம மூலதனம், முதலீட்டாளர் இரகசிய தன்மையின் முக்கிய தாக்கம் என்பன குறைந்த இலாபத்தன்மையை பரிந்துரைக்கின்றது. .

கைத்தொழில் விபரம்	கைத்தொழில் வளர்ச்சி					கம்பனி வளர்ச்சி				
	2024	2023	2022	2021	2020	2024	2023	2022	2021	2020
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	10.90%	2.40%	11.60%	3.50%	-2.20%	8.44%	-6.02%	2.75%	-0.73%	-0.31%

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
ஆ	மக்கள் காப்புறுதியினுடைய மோசடி எதிர்ப்புக் கொள்கை பிரகாரம், ‘‘ஒரு மோசடி கண்டு பிடிக்கப்பட்டவுடன் திணைக்களத்	பீப்பிள்ஸ் இன்சுரன்ஸ் PLC இன் விசாரணைக் குழு 2024 இலிருந்து வாடிக்கையாளரிடம் சேகரக்கப்படுகின்ற	ஊழியர்கள் நிறுத்தப்பட்டு அல்லது இராஜனாமா செய்தவரிகளின் நீதி மன்ற வழக்கு

தலைவர் மற்றும் சிரேஸ்ட உதவியாளர்- சட்டமுடன் சேர்ந்து HR- தவைரி ஏற்பட்ட நட்ட தொகையை அறவிடுவதற்கு ஒவ்வாருவரும் சாத்தியமானளவு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்'' எவ்வாறாயினும், பல சட்ட வழக்குகளில் 2018 வரையும் அவர்களுடைய மோசடித் தொகையை தீர்க்காமல் ஊழியர்கள் நிறுத்தப்பட்டு அல்லது இராஜனாமா செய்திருந்தனர். 2018 இலிருந்து அட்டவணையில் காட்டப்பட்டவாறு சேகரிக்கப்பட்ட தவணைப் பணங்கள் தவறாக அறிக்கையிடப்பட்டது. உளளக கட்டுப்பாட்டு பாதிப்பகள் காரணமாக பல ஆண்டுகளாக மோசடிகள் இடம்பெறுகின்ற போதிலும் ஒரே வகையான மோசடிகள் முன்னையதை போல 2024 இலும் ஏற்பட்டது. மோசடிகளை தடுப்பதற்காக வினைத்திறனான உள்ளக கட்டுப்பாடுகளை அமுலாக்குவதற்கு நிறுவனங்களுடைய நிதி ஸ்திரத் தன்மைக்கு ஆபத்தை உருவாக்கும்.

ஆண்டு	பதவி மற்றும் திணைக்களம்	மோசடி வகை	தொகை (ரூபா)
2018	உத்தியோகத்தர் உதவி யாளர் தரம் I	சேகரிக்கப்பட்ட தவணைப் பணங்களின் தவறான பயன்பாடு	464,786.44
2019	PI கவுணடர் ஹட்டன்	சேகரிக்கப்பட்ட தவணைப் பணங்களின் தவறான பயன்பாடு	215,514.76
2020	சிரேஸ்ட விற்பனை உத்தியோகத்தர் ஜர்எல	சேகரிக்கப்பட்ட தவணைப் பணங்களின் தவறான பயன்பாடு	57,379.00
2022	சிரேஸ்ட நிறைவேற்று -BLU தலைமை அலுவலகம்	தவணைப் பணங்களின் தவறான பயன்பாடு	குறிப்பிடப்படவில்லை
2023	சிரேஸ்ட விற்பனை உத்தியோகத்தர்	பணங்களின் தவறான பயன்பாடு	224,798.68

பணத்திலுள்ள சகல மோசடி நடவடிக்கை தொடர்பில் முறைப்பாடுகள் பெறுவதற்கு 14 நாட்களிறற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உள்ளடங்கள ஊழிர்களிடமிருந்தான நட்டங்களின் எரிய நேரத்தில் அறவிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு மோடி தடுப்புக் கொள்கை அமுலாக்கலை வலுப்படுத்துவதற்கு முகமைத்துவதிற்கு பரிந்துரைத்துள்ளதுடன். இனங்காணப்பட்ட மோசடி வகைகளின் மோடியை பாதுகாபப்பதற்கு உள்ளக கட்டுப்பாடு அமுலாக்கப்பட வேண்டும்

இரத்தினபுரி

3.2. முகாமைத்துவ திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	காப்புறுதி வியாபரத்திலிருந்து உழைத்த மிகைகளில் வீழ்ச்சி 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 675,160,124 மற்றும் ரூபா 513,359,128 எதிர்மறையாக பதியப்பட்டிருந்தது. இருப்பினும் 2024 இல் 66.40 சதவீதம் நட்ட வீதம், 44.5 உயர்ந்த வீத்தில் செலவின வீதம் மிகையாக இருந்தது இது 111 சதவீத் இணைந்த வீதத்தில் உள்ளது. இது குறைத்து காட்டப்படுகின்ற நட்டங்கள் உயர்த்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சுவீகரிப்பு கிரயங்களால் ஆரம்ப ஓட்டத்தில் இருந்தமை குறிக்கின்றது. தொடர்ந்தும் இந்த நிலை கம்பனியினுடைய ஒட்டு மொத்த இலாபத்தன்மை மற்றும் நிதி ஸ்திரத்தன்மையை பாதகமாக பாதித்திருந்தது.	கவனத்திற்கொள்ளப்பட்டது..	முகாமைத்துவம் வினைத்திறன் மற்றும் சுவீகரிப்பு கிரய தேர்வுமுறை அளவீடுகளை இனங்காண்பதற்கு கம்பனியினுடைய செயற்பாட்டு மற்றும் சுவீகரிப்பு கிரயங்களின் விரிவான மீளாய்வை பொறுப்பேற்க பரிந்துரைத்துள்ளது.

ஆண்டு	2024	2023
குறைத்து ஏழுதிய விதிகள்	- 513,359,128	- 675,160,124
நட்ட விகிதம்	66.40%	74.95%
செலவின விகிதம்	44.5%	41.2%
இணைந்த விகதம்	111%	116%

ஆ	ஏற்றுக்கொள்ளல் மற்றும் கைதவிர்த்தல் வழிகாட்டலின் பிரகாரம் சிசேஸ்ர பொறியியலாளர் - மோட்டால் வாகனங்களிள் கோரிக்கைகள் பெற்ற பின்னர் ஏழு நாட்களிற்குள் கைதவிர்க்கப்பட்ட வேண்டியதுடன் உரிய கப்பல் வாங்குவோருக்கு இந்த காலப்பகுதிக்குள் விடயத்தை பெறுவதற்கு அறிவிக்கப்பட வேண்டும். அதிகூடிய எண்ணிக்கையான நாட்கள் விஞ்சியிருப்பின் கிளை உத்தியோகத்தர்கள் முறைமையில் இருக்கின்ற தொகையை இரத்து செய்வதற்கு வேண்டப்பட்டனர். எவ்வாறாயினும் பொது காப்புறுதி முறைமையில் சில அனுமதிக்கப்பட்ட கப்பற் தொகுதியின் நிலை கைதவிர்ப்பின் பின்னர் விற்பனை என காட்டுவதற்கு பதிலாக ‘‘அனுமதிக்கப்பட்டது’’ ஆக இன்னமும்	விற்க்கப்பட்ட கப்பற்தொகுதியை உறுதிப்படுத்துவதற்கு கண்காணிப்பு பொறிமுறை அமுலாக்கப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு பற்றுச்சீட்டு இலக்கங்கள் முறைமையில் பதியப்பட்டிருந்தது.	முகாமைத்துவம் கப்பற்தொகுதி கைதவிர்ப்புக்களை பின்தொடர்ந்து பொது காப்புறுதி முறைமையின் உரிய காலத்தில் நாளது வரையாக்கலை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளல் மற்றும் கைதவிர்ப்பு வழிகாட்டலை கடுமையாக பின்பற்றப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

இருக்கின்றன. இது விற்கப்பட்ட ரூபா 4,530,340 கூட்டு தொகைான கப்பற் தொகுதி பற்றுச்சீட்டு இலக்கங்களை நிர்ணயிக்க இயலாதிருந்ததுடன் அத் தொகைகள் பொது காப்புறுதி முறைமையில் இதன்படி நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	புதிய வியாபார கொள்கைகான அனுமதிக்கப்பட்ட நடைமுறை பிரகாரம் “கொள்கைகள் வழங்கி 2 வாரங்களிற்குள் தலைமை அலுவலகத்தற்கு உரிய ஆவணங்கள் பெறப்பட்டிருக்காதுவிடின் கிளையிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு முறையை மாற்றுவதற்கான செயற்படும் ஆவணப்பட்டியல் எழுத்து மூலமாக உளளது. புதிய வியாபார கொள்யைற்ற வழிகாட்டலின் பிரகாரம் கொள்யையின் முழு ஆவணத் தொகுதியும் கொள்கை வழங்கி 01 வாரத்திற்குள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பட வேண்டும். எவ்வாறாயினும் கிளைக் கணக்காய்வு அறக்ககை – 2024/2025 இன் பிரகாரம் பின்வருமான தலைமை அலுவலகத்தில் பூர்த்தியாக்கப்பட்ட / பூர்த்தியாக்கப்படாத கொள்கை ஆவணங்களை அனுப்புவதில் தாமதங்கள் உள்ளதென அவதானிக்கப்பட்டது. . கிளை — தாமதங்கள் திருகோணமலை — 74 கடுவெல — 58 ஹிங்குராங்கொடை — 46 பாணந்துறை — 41 அம்பலாங்கொடை — 30 நித்தம்புவ — 29 கந்தளை — 22 பென்தோட்டை — 21 அக்குரஸ்ஸ — 19	வழிகாட்டல்கள் ஏற்கனவே அமுலாக்கப்பட்டிருந்தது. அறிக்கையை தவிர்த்து மாதந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது. சொல்லப்பட்ட வழிகாட்டலுடன் இணங்காதுவிடின் குறைத்து எழுதப்பட்டவற்றிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது.	முகாமைத்துவமானது கையடக்கப்பட்ட மற்றும் கையடக்க்பபடாத வியாபாரத்திற்கான புதிய கொள்கை நடைமுறைகளிற்கமைய கிளைகளிலிருத்து தலைமை அலுவலகத்திற்கு காப்புறுதி மற்றும் காப்புறுதி பத்திர ஆவணங்களை சமர்ப்பிப்தற்கான அனுமதிக்கப்பட்ட கால எல்லையை கடைப்பிடிபபதை கட்டாயமாக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது. கால ரீதியான விதிவிலக்கு அறிக்கைகள், தாமதமான சமர்ப்பிப்புக்கான விரிவான நடைமுறைகள் மற்றும் கிளைக் காப்புறுதியாளர்களிற்கான கணக்களிப்பு பொறிமுறைகள் போன்ற அத்தகைய முறையான கண்காணிப்பு கட்டுப்பாடுகள் தாபிக்கப்பட வேண்டும்.
ஆ	2011 யூலை 30 இல் புத்தூர் மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்ற கொள்ளை 26,554.5 கிராம் தங்க நகைகள் மற்றும் ரூபா 3,640,000 தொகையான காசு	இன்னமும் மிகுதியான இருக்கின்ற 4,564.94 கிராம் தங்க நகைகள் மற்றும் ரூபா 2,467,000 தொகையான காசு என்பன இதுவரை மக்கள்	முகாமைத்துவம் 45A/2025 ஆம் இலக்க காபபுறுதி தாளினை கருத்திற் கொண்டு

என்பன களவு போனமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1HOFBP000000022 ஆம் இலக்க மீள்காப்புறுதி கொள்கை மூலம் மேவப்பட்டிருந்தது. கம்பனியானது காப்புறுதி கோரிக்கைக்காக ரூபா 154.54 மில்லியன் முற்பணமா செலுத்தப்பட்டிருந்த போதிலும் காப்புறுதிகளிலிருந்து ரூபா 140.09 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. மிகுதியாக இருக்கின்ற ரூபா 14.45 மில்லயன் தொகை கம்பனியால் இறுக்கப்பட்டிருந்தது. களவுபோண தங்கத்தில் 13,093 கிராம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2025 பெப்ரவரி 3 இல் ரூபா 3,633,000 தொகையான காசுடன் 8,574.45 கிராம் மொத்தமான தங்கத்துடன் 1,190 நகைகளை கம்பனி ஏற்றிருந்தது. 45/2025 ஆம் இலக்க காப்புறுதி குழு தாளின் பிரகாரம், கம்பனியானது துண்டு துண்டுகளாக அந்த நகைகளை விற்பனை செய்யும் நடைமுறைகளை மேற்கொண்டிருந்தது. பின்னர் 45A/2025 ஆம் இலக்க காப்புறுதி குழு தாளின் பிரகாரம், கேள்வி நடைமுறை ஊடாக நகைகளை விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காப்புறுதியாளர் மற்றும் உரிய தரப்பினருக்கிடையில் காப்பீட்டு அறவீடுகளை பகிரப்படுகீன்ற மாற்றுவழி அணுகுமுறையை கவனத்திற் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆனால் இந்த நடவடிக்கை தொடர்பில் மேலும் நடவடிக்கை எடுக்க்பபட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.	வங்கியால் கையளிக்க வேண்டியிருந்தது. எனினும் முழு காப்பீட்டு விடயம் / காசு கையளிக்கப்பட்டது. நாங்கள் உரிய பங்குதாரர்களிற்கு இடையே பங்கீட்டை பிரித்தலை செயற்படுத்துகின்றோம்.	காப்புறுதி தொகைகளை காப்புறுதியாளர் மற்றும் உரிய தரப்பினரிடையே பகிருவதற்கான மாற்று வழியை முறையாகவும் சரியான நேரத்திலும் எடுப்பதற்கு பரிந்துரைத்தள்ளது. மேலும் முகாமைத்துவம் பெறப்பட்ட நகைகளை கைதவிர்க்க அல்லது விற்பனை செய்ய வெளிப்படையான மற்றும் அனுமதிக்கப்பட்ட நடைமுறைகமைய நடாத்தப்பட வேண்டும் அதேநேரம் முன்னேற்றங்களை சகல பங்குதாரர்களிற்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

3.4 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
அ	கம்பனியினுடைய கொள்வனவு கொள்கை மற்றும் கொள்வனவுக் கைநூல் ஆலோசனையாளர் தெரிவு மற்றும் நிரந்தரமாக்குவதற்காக குறித்த நடைமுறைகள் எதுவும் இருக்கவில்லை. அரச உடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் கம்பனி இலங்கை தேசிய கொள்வனவு முகவராண்மையால் வழங்கப்பட்ட	2022 இலிருந்து சந்தைப்படுத்தல் தலைவர் பதவி வெற்றிடமாக இரந்ததுடன் வபை உறுப்பினர் மற்றும் செயற்பாட்டு முகாமைத்தவக் குழு (OMC) உள்ளடங்க இது பிரதான முகாமைத்துவ பதவியாக (KMP) வகைப்படுத்தப்படவில்லை. முன்னர் CEO முறையான நடைமுகைள் அல்லது மரபு இல்லாமல் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை தனிப்பட்ட ரீதியாக முகாமை	தேசிய ொள்வனவு முகவராண்மை வழிகாட்டல் வெளிப்படையான போட்டித் தன்மை, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறையை உறுதி செய்யும் நிறுவன வழீகாட்டலுடன் ஆலோசனையாளர் ஆட்சேர்ப்பை சீரமைப்பதற்கு கம்பனயை

ஆலோசனையாளர் தெரிவு மற்றும் வேலைக்கமர்த்தல் மீதான வழிகாட்டலுடன் இணங்குவதற்கு கடமைப்பட்டுள்ளது. அந்த வழிகாட்டல்கள் குறிப்பு விதிமுறைகள் (TOR), அபிவிருத்தி, விளம்பரம், போட்டித் தெரிவு, நியமன விதி உள்ளடங்க வெளிப்படையான போட்டித் தன்மைவாய்ந்த மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகளை வலியுறுத்தியது. இருப்பினும் கம்பனியானது வேண்டப்பட்ட வழிகாட்டலை பின்பற்றாமல் 2023 பெப்ரவரி 23 ஆந் திகதிய சபை தீர்மானம் ஊடாக சந்தைப்படுத்த ஆலோசனையாளரை நியமித்திருந்தது. மேலும் நியமிக்கப்பட்ட ஆலோசனையாளர் கம்பனியினுடைய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் நியமன நடைமுறைக்கமைய நிரப்பப்பட்டிருந்ததென நிரந்தர பதவியணி பதவியாக இருந்த சந்தைப்படுத்தல் தலைவராக பதவிவகித்திருந்தார். ஆலோசனையாளர் ரூபா 200,000 மாதாந்த கட்டணத்தில் 2023 பெப்ரவரி 9 இலிருந்து ஆறு மாதங்களிற்காக தற்காலிக அடிப்படையில் ஆரம்பத்தில் சேர்க்கப்பட்டிருந்தது/ பின்னர் அந்த உடன்படிக்கை மூன்று சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

- முதலாவது நீடிப்பு- ரூபா 250,000 மாதாந்த கட்டணத்துடன் 2023 ஆகஸ்ட 10 இலிருந்து
- இரண்டாவது நீடிப்பு: ரூபா 250,000 மாதாந்த கட்டணத்துடன் 2024 பெப்ரவரி 9 இலிருந்து
- மூன்றாவது நீடிப்பு: ரூபா 250,000 மாதாந்த கட்டணத்துடன் 2024 ஆகஸ்ட் 9 இலிருந்து 2025 பெப்ரவரி 8 வரை

மேலும், 2023 திசெம்பர் 1 இல் கம்பனியானது அதே செய்திருந்தார்.

பல நேர்முக பரீட்சைகள் மற்றும் தலையீடுகள் இருப்பினும் கம்பனிளானது பொருத்தமான நபரை கண்டுபிடிக்கவில்லை. ஆகவே, கம்பனியானது சந்தைப்படுத்தல் செய்ற்பாடுகளை வடிவமைப்பதற்கும் மாதிரி தெரிவுகளை செலவு குறைந்த நிலையில் உயர்த்துதல் என்பவற்றிற்கு அனுபவமுள்ள ஆலோசனையாளரை வாடகைக்கு பெறுவதற்கு தீர்மானத்தது. CEO மனிதவளச் சபை மற்றும் சம்பளக் குழுவிற்கு இந்த நியமனத்தை பரிந்துரைத்துள்ளதுடன் பெரும்பாலான கேள்வியாளர் கோரியதை விட குறைவாக இருபா 200,000 வரை பேரம் பேசப்பட்ட ஆலோசனைக் கட்டணத்தை அங்கீகரிததததை சபை அங்கீகரித்தது. ஆலோசனையாளருடைய செயலாற்றல் சபையால் காலாண்டு ரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட்டது.

ஆலொசனையாளர் வெளியாருடன் பெரம் பேசல் மற்றும் உள்ளக திறமை அபிவிரத்தி வசதியளிப்பதற்கு சந்தைப்படுத்தல் தலைவர் உறுதி வழங்கியுள்ளார். ஆனால், நிரந்தர வேலைவாய்ப்பு நன்மைகள் இல்லாமல் வெளிவாரி ஆலோசனையாளராக கட்டிப்பாக கருதப்பட்டது. சகல ஒப்பந்த நீடிப்பகளிற்கும் சாதகமான குறிப்புடன் மற்றும் செயலாற்றல் மீளாய்வு மூலம் சபை அனுமதி வேண்டப்பட்டது.

கம்பனியானது நிதி அமைச்சால் வழங்கப்பட்ட அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலை பின்பற்றுகின்றது. ஆனால் கொழும்பு சந்தையில் (CSE) பட்டியலிடப்பட்ட கம்பனியாக அந்த கைநூலிலிருந்து விலக்கழிக்கப்பட்டதுடன் பதிலாக 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தால் நிர்வகிக்கப்பட்டது. பணிப்பாளர் சபை முழு முகாமைத்துவ அத்காரத்தையும் கைப்பற்றியிருந்ததுடன் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கடமைகளை பரிந்துரைத்துள்ளது.

மேலும், கொள்வனவு மற்றும் நியமனங்களின் வெளிப்படைத் தன்மை நேர்மை மற்றும் பொறுப்புணர்வை பாதுகாப்பதற்கான உடன்படிக்கை ஏதாவது ஆலோசனையாளருடைய பணிகளிலிருந்து எழுகின்ற அக்கறை இடைநிறுத்தல் அல்லது மீள் கட்டமைப்பை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

சந்தைப்படுத்தல் ஆலோசனையாளர் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் கம்பனி IKON உடன் சமூக ஊடக சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒழுங்கமைப்பு ஆலோசனை உடன்படிக்கையின் 5(ஆ) ஆம் பரிவிற்கு அப்பால் அக்கறையின் நலநன தெளிவாக்கல் தொடருகின்றது. இந்த கடுமையான தேவைப்பாடு ஆலோசனையாளர் தெரிவில் வெளிப்படைத் தன்மையையும் ஐயத்தினையும் நிர்வாக நலன்கள் முரண்படுவது குறித்து ஐயத்தினை எழுப்புகின்றது. செயற்பாடுகளை கைளிக்க முடியும். கம்பனியினுடைய சிறந்த அக்கறையில் செயற்படுகின்றது.

CSE ஆனது பட்டியலிடுகின்ற வதிகள் வெளிப்படுத்த வேண்டப்பட்டதுடன் சபை.'. பங்குதாரர் தொடர்புபட்ட தரப்பு அல்லது பொருண்மையான நிதிக் கொடுக்கல் வாங்கல்களிற்காக அனுமதித்தது. ஆலோசயையாளருடைய நிரந்தரமாக்கலிற்கு முன்னர் M/S IKON உடனான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் ஆலோசனையாளர் M/S IKON இனுடைய ஒப்பந்தத்திற்காக தெரிவு நடைமுறை மற்றும் தீர்மானம் எடுத்தலின் பகுதியாக இருக்கவில்லை. டிஜிரல் சந்தைப்படுத்தல் பொறுப்புகள் ஆலோசனையாளருடைய நோக்கெல்லையை அகற்றியிருந்ததுடன் அக்கறையை பாதுகாப்பதற்கும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவதற்கும் செயற்பாடுகளின் தலைவருக்கு ஒதுக்கப்பட்டது.